Registered as a News Paper   பக்கங்கள்: 06   விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02   திருவள்ளுவர் ஆண்டு 2023   தை 28   (11-02-1992)   செவ்வாய்க்கிழமை   ஓசை: 358

## அனுமதிப் பத்திரத்தில் தமிழ்க் கொலை

தற்காலிக எழுதுவினைஞர்களுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்ட அனுமதி அட்டையில் பல தமிழ்க் கொலைகள் நடைபெற்றுள்ளன. இதுவரை அரசினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் இருந்ததைவிட மிகக் கூடுதலான எழுத்துப் பிழைகள் இதில் காணப்படுகின்றன. இதில் பதின்மூன்று எழுத்துப் பிழைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அட்டையில் காணப்படும் பிழையான சொற்களும் (6ஆம் பக்கம் பார்க்க)

# முல்லையில் 25 ராணுவம் பலி

# 7 காவலரண்கள் நிர்மூலம்

## புலிகளின் வீராவேசத் தாக்குதல் இராணுவத்தினர் பின்வாங்கி ஓட்டம்

(முல்லைத்தீவு)

நேற்று அதிகாலை முல்லைத்தீவில மிகவும் துணிகரமான மின்னல்வேகத் தாக்குதலை விடுதலைப் புலிகளின் படையணிகள் மேற்கொண்டதில் 25 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 15 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு இராணுவ தளத்தின்கரை யோரப் பாதுகாப்பு வியூகம் மீது நடாத்தப்பட்ட இந்த வீராவேசத் தாக்குதலில் ஏழு காவல் அரண்கள் நிர்மூலமாக்கப்பட்டன. புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாமல் இராணுவத்தினர் சிதறி ஓட்டம் பிடித்தனர்.

இவ்வாண்டு புலிகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் மிகப்பெரியதாக வர்ணிக்கப்படும் இத்தாக்குதலில் பெருமளவு நவீன ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் எதுவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு தளக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இம் மின்னல் வேகத் துணிகரத் தாக்குதல் நேற்று அதிகாலை 1-10 க்கு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் பதினைந்து நிமிடம் வரையில் நீடித்த இத்தாக்குதலில் 7 காவலரண்களை புலிகள் தாக்கி அழித்தனர். புலிகளின் ஆவேசம் மிக்க இத்தாக்குதலில, கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களையும் விட்டுவிட்டு [6 ஆம் பக்கம் பார்க்க]

## வடபகுதிமீது உடனடி ராணுவ நடவடிக்கை இல்லை - ரணில்

(கொழும்பு)

வடபகுதிமீது உடனடியான இராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார். பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன் தினம் தம்மைச் சந்தித்த வடபகுதி எம். பி.க்களிடம் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## அமைச்சர்கள், தளபதிகள் ஊர்காவற்றுறை விஜயம்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அமைச்சர்களும், தளபதிகளும் கலந்துகொண்ட மாநாடு ஒன்று நேற்று முன் தினம் ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தீவகப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை நடத்துவது தொடர்பாகவும் அப்பகுதிகளுக்கான உணவு விநி [6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் - குவேக்கர்ஸ் நேற்றுச் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளும் குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினரும் நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். எனினும் பேச்சுவார்த்தையின் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஜெனிவாவில் இருந்து யாழ் வந்திருக்கும் மேற்படி சர்வதேச சமாதானக் குழுவினரின் தரப்பில் ஜோஜல் மக்லெனன், ராமமூர்த்தி ஆகியோரும் விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் [6 ஆம் பக்கம் பார்க்க]

## இரு ரெலோ உறுப்பினர் ஆரையம்பதியில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தயானந்தம் (சலீம்) பயில்வாகனம் சந்திரப்பிரகாஷ் (வெள்ளையன்) ஆகிய இருவருமே விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

## "கம்பன் விழா" சிறப்புற நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கம்பன் விழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 14-ம், 15-ம், 16-ம், 17-ம் திகதிகளில்காலை நிகழ்ச்சிகள் நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் வழமை (5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பல்கள்; தகவல் கூறமுடியாது -வின்சன்பெரேரா

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்வனவு செய்த கப்பல்கள் சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகளை வெளியிடமுடியாது என அமைச்சர் வின்சன்ட்பெரேரா வெள்ளியன்று பாராளுமன்றத்தில் கூறினார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் இது தொடர்பாக சு. க. எம். பி. ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே கேள்வி எழுப்பினார். அப்போது அவர் தெரிவிக்கையில்.

விடுதலைப் புலிகள் இரு கப்பல்களை புதிதாக வாங்கியுள்ளனர். இவை பபுவா நியுகி [5 ஆம் பக்கம் பார்க்க]

## 50 கலிபர், ஆர். பி. ஜி. உட்பட பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலின்பின் விடுதலைப்புலிகளால் இராணுவ காவலரண்களில் இருந்து மீட்கப்பட்ட நவீன ரக ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ 50 கலிபர் துப்பாககி - 01
- ★ 50 கலிபர் றைபோட் - 01
- ★ 50 கலிபர் ரவைகள் - 1028
- ★ 50 கலிபர் லிங் - 58
- ★ மினிமினி எல்.எம் ஜி - 01
  மேலதிக சுடுகுழல்கள் - 05
  ரவை லிங்குடன் - 3000
- ★ ஆர். பி. ஜி. - 01
- ★ ஆர். பி. ஜி. ஷெல் - 04
- ★ ரி 56-1ரக துப்பாக்கிகள்-18
- ★ நடுத்தர ரவைகள் - 4922
- ★ ரி-56 ரக மகசீன் - 32

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### வீரவேங்கை விஜி

மட்டக்களப்பு மாவட்டம் மயில வெட்டுவானில் கடந்த (5 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தமுனைக்கு செல்வதற்கு அதிகாரிகள் தயக்கம்

### இராணுவ தரப்பில் அதிருப்தி

வடக்கு - கிழக்கு யுத்த முனைக்குச் செல்லாமல் தமது செல்வாக்கைப் பாவித்து இராணுவத் தலைமைச் செயலகத்தில் குளிரூட்டப்பட்ட அறைகளில் மேசைக்கு மேசை மாறி சுகமனுபவிக்கும் அதிகாரிகள் குறித்து இராணுவத்தில் அதிருப்தி நிலவுவதாக ஐலன்ட் ஞாயிறு இதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது யுத்தத்தில் மற்றவர்களை விட [6 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் அகல கால்வைத்தால் படைக்கு ஆபத்தாக முடியும்

### முல்லைத் தாக்குதல் உணர்த்தும் பாடம்

(லண்டன்)

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் அகலக் கால் வைத்தால் அது மிக ஆபத்தாகமுடியும் என்பதைப் புலிப் படையினர் காட்டியுள்ளனர் என்று நேற்று இடம்பெற்ற புலிகளின் முல்லைத்தீவுத்தாக்குதலை உதாரணம்காட்டி பி. பி. ஸி முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் தமது செய்திக்குறிப்பில் கூறியிருக்கிறார்.

நேரடியாக மோதுவதில் [6 ஆம் பக்கம் பார்க்க]

# காரைநகர் கொத்தணியில் உயர் வகுப்பு ஆரம்பம்

(நமது நிருபர்)

காரைநகர் கொத்தணிப் பிரிவுப் பாடசாலைகளில் கடந்த ஐந்து மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் காரைநகர்கொத்தணிஅதிபர் தேவதாசன் தெரிவிக்கிறார்.

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து காரைநகர் மாணவர்களுக்கான வகுப்புக்கள் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் மாலைவேளையில் இயங்கிவந்தது தெரிந்ததே

இவ்வேளை நடைபெற்ற உயர்தர வகுப்புக்களைக் கடந்த ஆவணி மாதம் எட்டாம் திகதியுடன் நிறுத்தும்படி கல்வித் திணைக்களம் உத்தரவிட்டிருந்தது.

மூடப்பட்ட வகுப்புக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி கொத்தணி அதிபரும், ஒரு சில ஆசிரியர்களும், பெற்றோரும், மாணவர்களும் தொடர்ச்சியாகக் கல்விப்பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்பயனாக நேற்றுமுதல் மீண்டும் உயர்தர வகுப்புக்கள் நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்புக்களை யாழ். நகரில் தனியார் கல்வி நிலைய கட்டடங்களில் பகல்வேளைகளில் நடத்துவதற்கு ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளது. இதனால் இக் கல்லூரிகளைச் சேர்ந்த முந்நூறு மாணவர்கள் கல்வியைத் தொடரக்கூடியதாகவுள்ளது என அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதில் உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான ஆய்வுகூட வசதிகளைக் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடாத்துவதற்கான ஒழுங்கைக் கல்விப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார். (ச)

# புலிகள் தலைவர்களை கோருவதில் சட்டப் பிரச்சினைகள் உள்ளன

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும் சென்னை உயர் நீதிமன்றத்தில் சரணடையக் கோரும், ஆவணங்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான நடவடிக்கைகளை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் இணைந்து ஆராய்ந்து வருவதாகக்கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புலிகள் இயக்கத் தலைவர்களைச் சரணடைய எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நீதிமன்றம் அவகாசம்கொடுத்துள்ளமையால், எந்த நடவடிக்கைகளும் அதன் பின்னரே மேற்கொள்ளப்படலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பொதுவாகத் தேடப்படுபவர்கள் தொடர்பாக பிடி ஆணை குற்றம் நடைபெற்ற இடத்தில் பிறப்பிக்கப்பட்டதும் மேலதிக விசாரணை அவர்கள் தங்கியுள்ள நாட்டு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற வேண்டும். சாட்சியங்கள் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னரே நீதிபதி கைது செய்யும்படி உத்தரவைப் பிறப்பிப்பார்.

எனவே கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சாட்சியங்கள் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும். வழக்கு தாக்கல் செய்யாமல் எவரையும் நாடு கடத்த முடியாது.

மேலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நாடு கடத்தல் ஒப்பந்தம் எதுவும் இல்லை. ஆனால் இரு நடுகளுமே பொதுநலவாய நாடுகள் நாடு கடத்தல் ஒப்பந்தங்களில் இருநாடுகளும் கையொப்பம் இட்டுள்ளன. எனவே இந்தியா இந்த அடிப்படையில் செயற்பட முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சிறிலங்காவின் நாடு கடத்தல் சட்டத்தில் 31 வகையான குற்றங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் குற்றங்கள் குறிப்பிட்ட இரு நாடுகளிலும் குற்றச் செயல்களாக கருதப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அந்தக் குற்றம் 12 மாதத்துக்குக் குறையாத தண்டனைகளைப் பெறக் கூடிய குற்றமாக இருத்தல் வேண்டும்.

இதேவேளை நாடு கடத்தப்படுகின்ற அந்த நபர் அரசியல் சம்பந்தப் பட்டவராயிருப்பின் சாதி, மதம், தேசிய இனம் அரசியல் வேறுபாடு காரணமாக இருப்பின் தனி சுதந்திரம், பால், சமயம், தேசியம் அரசியல் வேறுபாடுகளினால் பாதிப்புற்றிருப்பின் அவரை நாடு கடத்த முடியாது.

இந்தியாவுக்குத் தேவைப்படும் இவர்களை இங்கு கைது செய்ய சிறிலங்கா படைகளுடன் இணைந்து இந்தியப் படைகள் செயல்பட முடியும். ஆனால் இந்தியப் படைகள் தனித்து தேடுதலில் ஈடுபட சட்டத்தில் வழிமுறைகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புடவையாலை விற்பனையில் மோசடி

# 100 மில். டாலர் பெறுமதியை 7 மில். டாலர் அரசு விற்பனை

நூறு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஒரு புடைவைஆலையை சிறிலங்கா அரசு ஏழு மில்லியன் டொலருக்குவிற்றுள்ளதாக புடைவை உற்பத்தியாளர் சங்கத்தின் ''ரெச்ஸ்ரயில் ருடே'' என்ற இதழ் தெரிவிக்கின்றது.

வெளிநாட்டு ஏற்றுமதிக்கென்று உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை கபூல் லங்கா லிமிட்டெட் என்ற நிறுவனம் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதாகவும் புடைவைஉற்பத்தியாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

தரமான துணிவகைகளை தரம் குறைந்தவை என்று கபூல் லங்கா லிமிட்டெட் உள்ளூரில் விற்பனை செய்வதாக சங்கத்தின் தலைவர் ஏ.வை.எஸ். ஞானம் கைத்தொழில் ஆணைக்குழுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி கபூல் லங்கா லிமிட்டெட் உள்ளூர்ச்சந்தையில் அதன் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதால் சிறிலங்கா புடைவைஉற்பத்தியாளர்பெரிதும் பாதிக்கப்படுவதாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச உடைமையாக இருந்த துல்கிரிய புடைவை ஆலையின் தற்போதைய உரிமையாளர் கபூல் லங்கா லிமிட்டெட் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரான்லி திலகரெட்ணா மீண்டும் சுதந்திரக்கட்சியில்

(கொழும்பு)

முன்னாள், சபாநாயகர் ஸ்ரான்லி திலகரெட்ணா சுதந்திரக் கட்சியில் மீளவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் ஸ்ரான்லி திலகரெட்ணா கட்சி விதிகளுக்கு முரணாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் மீது அவர் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் ஸ்ரான்லி திலகரெட்ணாவுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை நீக்கப்பட்டு, அவர் கட்சியில் மீளவும் அனுமதிக்கப்பட்டார்.

கட்சியின் பொதுச் செயலாளராகப் பதில் கடமை புரிந்து வந்த கேகாலைமாவட்ட சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தர்மசிறி சேனநாயக்கா அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டார். இந்தமுடிவும் மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

மத்திய குழுக் கூட்டத்திற்கு கே. பி ரெட்நாயக்காதலைமை வகித்தார். அனுராபண்டாரநாயக்காவும் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தார்.

## லலித் காமினி கூட்டத்தில்

# படப்பிடிப்பாளர் கமரா பறித்தெடுக்கப்பட்டது

(கொழும்பு)

அத்துலத் முதலி தலைமையில் இயங்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கூட்டமொன்றில்படப்பிடிப்பாளரின் கமிரா பறிமுதல் செய்யப்பட்டது. மொறட்டுமுல்ல என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்கள் குறைவாகக் கலந்து கொண்டதால் படம் எடுக்காமல் தடுக்கவே அத்துலத் முதலியின் பணிப்புரையின் பேரில் கமரா பறிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கூட்டம் முடிவடைந்ததும், புகைப்படச்சுருள் இல்லாமல் வெறும் கமரா உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய காமினி திஸாநாயக்காவும் கூட்டம் முடிவதற்கு முன்பே அந்த இடத்திலிருந்து நழுவி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமது கட்சிக்கு இப்போது பொதுமக்களின் ஆதரவு குறைந்து வருவதாக அக் கூட்டத்தில் பேசிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கமராச் சொந்தக்காரரின் முறைப்பாடு குறித்து மொறட்டுவல பொலிஸ் விசாரித்து வருகிறது. இவர் தான் தாக்கபபட்டதாகவும் முறைப்பாடு செய்துள்ளார்.

## தையல் வேலை

# போதனாசிரியர் பயிற்சி நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்கள தையல் வேலைப் போதனாசிரியர்களுக்கான பயிற்சி நிலையம் நேற்றுக் காலை நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. சுமார்முப்பத்தைந்து ஆசிரியர்களுக்கு இங்கு மேலதிக பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலதிக பயிற்சிக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இந்த ஆசிரியர்கள் தமது பயிற்சியை முடித்ததும் யாழ். மாவட்டத்தின் சகல கிராமப் பகுதிகளிலும் தமதுசேவையை வழங்குவர் என யாழ். கல்விப் பணிப்பாளர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (ச)

# ஒத்திவைப்பு

(கொழும்பு)

பேராசிரியர் ரால்ப்புல்ஜன்ஸ் கடத்தல் தொடர்பான வழக்கு இம்மாதம் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இவ் வழக்கை விசாரித்து வந்த மேல் நீதிமன்ற நீதியரசர் திரு.ரி.பி. உளம்புவ சுகயீனமுற்றிருப்பதாலேயே இவ்வாறு பிற்போடப்பட்டிருக்கிறது. வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த இரகசியப்பொலிசைச் சேர்ந்த பிரதம இன்ஸ்பெக்டர் சுனில் சகாபந்துவை அடுத்த தவணையில் நீதிமன்றத்தில் ஆஜராகும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

# பிறந்தநாள் வாழ்த்து!



## செல்வன் செந்தூரன்

பிரான்சில் வசிக்கும் அரியாலையைச் சேர்ந்த லோகநாதன் புஸ்பராணி தம்பதிகளின் தவப்புதல்வன் செந்தூரன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, ஆசைஅக்கா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணன்மார், தம்பியும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர். (2199)

# ‘குமண’ நேற்று வந்தது

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள்கள், மருந்து வகைகளுடன் குமண கப்பல் நேற்று பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் யாழ். செயலகத்திற்கான பொருள்களை விட தனியாருக்கே மிகக் கூடுதலான பொருள்கள் வந்துள்ளன. (ச)

# நினைவு கூருகின்றோம்

## 1992-02-11

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் இலுப்பையடிச்சேனையில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**வாணன்** (பன்குடாவெளி)

**பாலன்** (இலுப்பையடிச்சேனை)

பாலைதீவுக்கும் - இரணைதீவுக்குமிடையில் சோளகம் என்ற இடத்தில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் படகு மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட 6 மீனவர்கள்

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்காப் படையினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**வெள்ளை/குரு** (எலிமியன் மெண்டிஸ் நெல்சன் றெஜினோல்ட் - செம்பியன்பற்று, வடக்கு)

**லிங்கம்/அம்முனி** (பரமசாமி அமிர்தலிங்கம்-கந்தரோடை, சுன்னாகம்)

1989 ஆம் ஆண்டு கோப்பா வெளியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**2-ம் லெப். அசோக்** (முத்துலிங்கம் மரியதாஸ் - பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கலா** (அக்கறைப்பற்று, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி** (சி-3903)

# அல்ஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதம்;
# ஒடுக்குவதில் அரசு தீவிரம்

கம்யூனிசத்தின் பிடியிலிருந்து உலகம் விடுபட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் வேறொரு சித்தாந்தம் உலகிலே முன்னணிக்கு முயற்சித்துக் கொண்டு வருகிறது. அந்த சித்தாந்தம் இஸ்லாமிய அடிப்படை வாதம் ஆகும்.

அரபு லீக்கில் அங்கம் வகிக்கும் 21 நாடுகளில் பெரும்பாலானவை மன்னராட்சிகளாக காணப்படுகின்றன. மன்னராட்சியிலிருந்து நீங்கிய ஒரு சில நாடுகளும் 'நவீன மன்னராட்சி' முறையொன்றில் இயங்குவதாக கொள்ளக் கூடியவகையில் அங்குள்ள அரசியல் அமைப்புகள் காணப்படுகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாமிய அடிப்படை வாதம் வளர்வது பல இஸ்லாமிய நாடுகளுக்கே சிறிதும் விரும்பம் இல்லை. அப்படியிருந்தும் இதுவரை நடக்காத ஒன்று அல்ஜீரியாவில் நடைபெற்றுள்ளது. அதாவது இஸ்லாமிய அடிப்படைவாத கட்சியொன்று தேர்தல் மூலம் ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டமையாகும். இது அரபு நாடு ஒன்றில் இஸ்லாமிய ஷரியத சட்டத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் என கருதப்படுகிறது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் தேசியவிடுதலைப் போராட்டங்கள் உச்சக் கட்டத்தை அடைந்தது. இந்த விடுதலைப் போராட்டங்களில் அல்ஜீரியஸ் போராட்டம் முன்னணியில் இருந்தது. பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த அல்ஜீரியாவில் 1954 ஆம் ஆண்டு ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் ஆரம்பம் ஆகியது. 1962ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் அல்ஜீரியா சுதந்திரம் அடைந்தது.

அல்ஜீரியர்ஸ் புரட்சிஏனைய ஆபிரிக்க நாடுகளைப் போல் மாக்சியக் கோட்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் மார்க்சீய வாதிகள் இப்போராட்டங்தில் பங்கு பற்றாது விலகி இருந்தனர். பெரும்பான்மை இனமான முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி அங்கு சிறுபான்மை இனமாக இருந்த பிரெஞ்சு மக்கள் கூட இந்தப் போராட்டங்களில் பங்கு கொண்டனர்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அல்ஜீரியதேசிய விடுதலை முன்னணித் தலைவர்களில் ஒருவரான பென்பெலா ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அங்கு ஏற்பட்ட - இராணுவப் புரட்சியின் பின் கார்னல் பூமடின் என்பவர் நாட்டின் தலைவராகப் பதவி ஏற்றார்.

பல்வேறு அரசு தலைவர்கள் மாறிய போதும் காலனித்துவ காலகட்டத்தில் நிலவிய அரச கட்டமைப்பில்மாற்றங்கள்ஏற்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. இதன் எதிரொலி இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் வளர்ச்சிக்கு அடிகோலின.

அங்கு பலகட்சி முறையையும் இஸ்லாமிய ஆட்சியையும் கொண்டு வரும்படி இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சியான இஸ்லாமிய விடுதலை முன்னணி கோரியது. இதற்காக பல போராட்டங்களையும் நடாத்தியது. அங்கு ஆட்சிமுறை மாற்றம் கொண்டு வரப்படாவிட்டால் புனிதப்போராட்டம் (ஜிகாத்) நடந்தப் போவதாக அதன் தலைவர் அப்பாஸ் மதானி கூறினார். அத்துடன் இஸ்லாமியப் போராளிகள் அல்ஜீரிய இராணுவத்துடன் பல மோதல்களிலும்ஈடுபட்டனர். இதனால் அடிப்படைவாதிகளில் பலர் இராணுவத்தினால் கொல்லப்பட்டதுடன் அதன் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை ஜனாதிபதி சாட்லி பென்ஜடின் நாட்டில் பல கட்சி ஆட்சி முறையை கொண்டுவர சம்மதித்ததுடன் அல்ஜீரிய விடுதலைமுன்னணியின் தலைமைப் பதவியிலிருந்தும் விலகினார்.

கடந்த வருடம் யூன்மாதம் உள்ளூராட்சி மட்டத்திலான தேர்தல்களை அரசங்கம் நடாத்தியபோது இஸ்லாமிய விடுதலை முன்னணி பெரும் வெற்றியைப் பெற்றது. இந்த வெற்றியை அடுத்து பொதுத் தேர்தலை நடாத்தும்படி இஸ்லாமிய விடுதலை முன்னணி பல போராட்டங்களை நடாத்தியது. மொத்தம் 430 தொகுதிகளைக் கொண்ட ஆட்சி பீடத்திற்கு கடந்த டிசம்பர் 26 இல் நடைபெற்ற முதலாவது கட்ட தேர்தலில் இஸ்லாமிய அடிப்படை வாத கட்சி 233தொகுதிகளில் 188ஐ கைப்பற்றியது ஆளும் கட்சி 19 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றது. ஜனவரி 16 இல் நடைபெற இருந்த இரண்டாவதுகட்ட தேர்தலில் 28 தொகுதிகளை பெற்றால் ஆட்சி அமைக்கும் உரிமையை இஸ்லாமிய அடிப்படைவாத கட்சி பெற்றிருக்கும்.

ஆனால் இதனைத்தடுப்பதற்காக ஜனாதிபதி சாட்லி பென்ஜடின் தனது பதவியை ஜனவரி 11 இல் ராஜினாமா செய்து விட்டு இராணுவத்தின் ஆதரவுடன் ஐவரைக் கொண்ட பாதுகாப்புச் சபையிடம் ஆட்சிப்பொறுப்புகளை ஒப்படைத்தார். புதிய பாதுகாப்புச்சபையின் தலைவராக அல்ஜீரியாவின் முதல் ஜனாதிபதியான பென்பெலாவினால் மரணதண்டனை விதிக்கப்பட்டவரும் கடந்த 27 வருடங்களாக வெளிநாடுகளில் மறைந்து வாழ்ந்தவருமான 72 வயதுடைய முகமட் பவ்டியெவ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பதவியேற்றபின் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இஸ்லாம் ஒரு புனிதமான மதம் எனவும், அதனை சுயலாபத்திற்காக பயன் படுத்த அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இரண்டாவது கட்ட வாக்கெடுப்பும் ரத்துச் செய்யப்பட்டது. புதிய பாதுகாப்புச் சபையும் அதன் நடவடிக்கைகளும் அரசியலமைப்புக்கு எதிரானவை என இஸ்லாமிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது. அத்துடன் பல போராட்டங்களையும் இது நடாத்தி வருகிறது.

இஸ்லாமிய விடுதலை முன்னணியினரின் கோரிக்கை பல கட்சி அமைப்பு முறையாக இருந்த போதிலும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் இஸ்லாமிய ஷரியத் சட்டத்தினைக் கொண்ட ஆட்சி முறையையே அமுல் செய்யப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அல்ஜீரியாவின் அண்டை நாடான டியூனிசியசின் ஜனாதிபதி முஸ்லிம் அடிப்படைவாதிகளை முற்றாக முறியடிக்கும்படி கோரியுள்ளார். சுதந்திரப் போராட்டத்தின் போது அல்ஜீரியர்களுக்கு பின்தளமாக விளங்கிய டியூனிசியஸ் ஒரு இஸ்லாமிய நாடு ஆகும்.

மேலும் தனது நாட்டில் அடிப்படைவாத கட்சியான நிஸ்பல்நடாவின் கெரில்லா போராட்டத்தை மூர்க்கமாக ஒடுக்கியும் வருகிறார். மேலும் இன்னுமொரு அண்டை நாடான மொராக்கோ தனது நாட்டு அடிப்படைவாதிகளை ஒடுக்கி வருவதுடன் அல்ஜீரிய அரசுக்கு ஆதரவும் தெரிவித்து வருகிறது.

மேலும், இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கு சவூதி அரேபியா ஆதரவு வழங்கி வந்தது. வளைகுடா யுத்தத்தின்போது இஸ்லாமிய விடுதலை முன்னணி ஈராக்கிற்கு ஆதரவு வழங்கியதை தொடர்ந்து தனது உதவிகளை நிறுத்தி விட்டது.

அத்துடன் இஸ்லாமியஅடிப்படைவாதம் என்றாலே வெறுப்பைக் காட்டும் அமெரிக்காஉள்ளிட்ட மேற்கத்தைய நாடுகள் அல்ஜீயர்சில் நடைபெறும் புரட்சியைஆதரிக்காது என்பது வெளிப்படை. அமெரிக்காவிற்கு எதிரானமத்திய கிழக்கு நாடுகளில் ஈரானைத் தவிர்ந்த ஈராக், லிபியா என்பன இஸ்லாமிய ஷரியத் சட்டத்தை அமுல் படுத்துவதை விரும்புவதில்லை.

இந்நிலையில்அல்ஜீரிய அடிப்படைவாதிகள் டியூனிசியா, மொராக்கோ போன்ற நாடுகளிலுள்ள கெரில்லாக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு போராட்டங்களை நடாத்த முடியும். இது ஒரு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. இதன் விளைவாக நீண்ட ஒரு கெரில்லா போராட்டம் அல்ஜீரியாவில் இடம் பெறக்கூடும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தொகுப்பு:- வேலவன்

## இஸ்லாமிய மீட்பு முன்னணியை அல்ஜீரிய அரசு கலைக்கமுடிவு

அல்ஜீரிய அதிகாரிகள் அங்குள்ள இஸ்லாமிய மீட்பு முன்னணியைக் கலைத்துவிட நடவடிக்கை எடுத்துள்ளனர். நாட்டில் அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் உள்துறை அமைச்சு இதனைஅறிவித்துள்ளது. இஸ்லாமிய மீட்பு முன்னணி நாட்டைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் அதனைக் கலைக்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அல்ஜீரியாவில் பாதுகாப்பு படையினருக்கும், இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கும் இடையே கடந்த இரண்டு நாட்களில் நடந்த மோதல்களில் மட்டும் நாற்பதுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். தற்போது பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் அவசர கால நிலையினால் தற்போதய ஆட்சிமன்றம் கூடுதலான அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

## பாக். பொலிசார் - ஜே.கே.எல்.எப் ஆசாத் காஷ்மீரில் மோதல்

(இஸ்லாமாபாத்)

ஜே. கே. எல். எவ் - எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினருக்கும் பாகிஸ்தான் பொலிசாருக்குமிடையே மோதல்கள் நடைபெற்றதாக செய்திகள் வந்துள்ளன. பாகிஸ்தான் ஆளுகையிலுள்ள முசாகராபாத் பகுதியைச் சென்றடைய ஜே. கே. எல். எப்பினர் முயன்றபோது நாற்பது பேர் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் பொலிசார் கூறியுள்ளனர்.

இதனிடையே பாகிஸ்தான் ஆளுகையிலுள்ள ஆசாத் காஷ்மீரின் பிரதம மந்திரி மார்க்கூம் அப்துல் கயூம் பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் எல்லைக் கோட்டைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாமென ஜே கே.எல் எப்பினரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## அனைத்துக் கட்சி முடிவை தி. மு. க. ஆதரிக்கும்

(சென்னை)

புதுடில்லியில் இன்று நடைபெறும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு தி. மு. க. முழுமையாக ஆதரிக்கும்என்று அதன் தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார். நேற்று சென்னையில் அவர் விடுத்த அறிக்கையில் மேலும் கூறுகையில் ஜம்மு-காஷ்மீர் நிலைமைகுறித்துபிரதமர் பி வி. நரசிம்மராவ் கூட்டியுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள தமக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகள் காரணமாகஅதில்கலந்து கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்தார்.

## மூவர் கொலை

(மட்டக்களப்பு)

ஆரையம்பதியில் தத்தமது வீடுகளில் வைத்து வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ரெலோ இயக்கத்தினால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. தமிழ் பெண்ணொருவரை திருமணம் செய்தவரான சத்தார் என்பவரும் காங்கேயன் ஓடையைச் சேர்ந்த முஸ்லீம் வாலிபர் ஒருவரும் தமிழ்ப் பெண்மணி ஒருவருமே ரெலோ இயக்கத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

## அகதிகள் வருகை

தென்னிந்தியாவில் இருந்து புறப்பட்ட அகதிகளின் மூன்றாவது தொகுதியினர் நேற்று முன்தினம் திருக்கோணமலைக்கு வந்து சேர்ந்தனர்.

707 பேர் கொண்ட இந்தத் தொகுதியில் 192 பேர் அரசாங்க ஊழியர்களாவர்.

## புலிகளுக்கு தகவல்களை இராணுவம் வழங்கியதாம் -ஒஸி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளுக்கு இரகசியத் தகவல்களை இராணுவமே வழங்கியது என்று ஒஸி அபய குணசேகரா கூறியுள்ளார். மேல் மாகாண சபையின் எதிர்க் கட்சித்தலைவரும், சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவருமான ஒஸி அபய குணசேகரா மேலும் கூறுகையில் தேசிய பாதுகாப்புஅமைச்சராகலலித் அத்துலத் முதலி செயற்பட்ட காலத்தில், புலிகளின் பிடியிலிருந்த இராணுவத்தினர் இருவரை மீட்க சிறிலங்கா மக்கள் கட்சியின் முன்னாள் தலைவர் விஜயகுமாரணதுங்க எடுத்த முயற்சியை முறியடித்து பின்னர் இரு இராணுவத்தினருக்குப் பதிலாக இரு புலிகளை விடுவித்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழக கரையோரத்தில் 39 சோதனைச்சாவடிகள்

(சென்னை)

தமிழ்நாட்டில் கரையோரப் பகுதிகளில் முப்பத்தொன்பது சோதனைச் சாவடி நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இருபத்து நான்கு மணி நேரமும் அதி நவீன ஆயுதங்களோடு பொலிசார் இச்சோதனைச் சாவடிகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் ரோந்து நடவடிக்கைகளுக்கென தமிழ்நாடு விசேட பொலிஸ் அணியிலிருந்தும், றிசேர்வ் பொலிஸ் அணியிலிருந்தும் தலா பத்துப்படைப் பிரிவுகள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன எனவும் சென்னையிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## 25,000 இலங்கைத் தமிழர் ஜேர்மனியில் தஞ்சமாம்

(பேர்லின்)

இலங்கைத் தமிழர்களில் இருபத்தையாயிரம் பேர் அகதிகளாக ஜேர்மனியில் தஞ்சம் புகுந்திருப்பதாக சிரேட்ட ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். அவர் இலங்கை பற்றியத் தவறான தகவல்கள் அநேகமான உலகப் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதாகவும், ஜேர்மனியில் தஞ்சம் புகுந்திருக்கும் தமிழர்களும் கூட தவறான தகவல்களையே தருவதாகவும் மேலும் கூறியுள்ளார்.

# காஷ்மீரியர்கள் இனியும் பாக். நம்பி ஏமாறக் கூடாது

## ஜே. கே. எல். எப். குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசாங்கம் இரட்டைக் கொள்கை நிலையொன்றை பின்பற்றுவதாகவும், காஷ்மீர் மக்கள் இனிமேலும் இஸ்லாமாபாத்தினால் ஏமாற்றப்பட இடம் கொடுக்கப்படமாட்டாது என்றும் ஜே. கே. எல். எப்பின் உயர் தலைவர்களில்ஒருவரான ஜாபீர் அகமட் மீர் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் கூறுகையில் இந்திய அரசின் நெருக்குதல்களுக்கு அடிபணிந்து இஸ்லாமாபாத் இணக்கம் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தான் அரசை குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஜே. கே. எல். எப். ஆதரவாளர்களைஏற்றிச் சென்ற பஸ்வண்டியொன்றை பாகிஸ்தான் பொலிசார் தடுத்து நிறுத்தி அதிலிருந்தவர்களை கைது செய்ததாகஜே. கே. எல். எப். தலைவர் அமானுலிலாகான் குற்றம் சாட்டியுள்ளார்.

## தனியார் இறக்குமதி செய்த
# 10,107 மெ. தொன் அரிசியில் 703மெ. தொன் அரிசி பழுது

(கொழும்பு)

வர்த்தக நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட 10,107 தொன் அரிசியில் 703 மெற்றிக் தொன் அரிசி மனித பாவனைக்குதவாத பழுதடைந்த அரிசி என்று உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வீரசிங்கமல்லிமராச்சி தெரிவித்தார்.

கொழும்பு லங்புறோ என்ற வர்த்தக நிறுவனம் 13,69,420 அமெரிக்க டாலர் பெறுமதியான 5267 மெற்றிக் தொன் சாதாரண அரிசியையும், 4840 மெற்றிக்தொன் வெள்ளைப் பச்சைஅரிசியையும் இறக்குமதி செய்துள்ளது. இதில் 1,82,780 அமெரிக்க டாலர் பெறுமதியான 703 மெற்றிக் தொன் அரிசி பழுதடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

செமின் மெஸிடர் என்ற சுவிற்சர்லாந்து நிறுவனத்தின் உள்ளூர் பிரதித்துவ ஸ்தாபனமான கொழும்பு 2 இல் உள்ள லங்புறோ என்ற நிறுவனமே இந்த அரிசியை இறக்குமதி செய்துள்ளது என்றும், பாவனைக்குதவாத அரிசி அழிக்கப்படும் என்றும் அமைச்சர் மல்லிமராச்சி தெரிவித்தார்.

# பல்கலைக்கழக 'ராக்கிங்' விரிவுரையாளர் கண்டனம்

பல்கலைக்கழகங்களில் சகல விதமான 'றாக்கிங்'களையும் பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் சங்கங்கள் சம்மேளனம் கண்டித்துள்ளன. றாக்கிங் செய்வதைக் கைவிடுமாறு சம்மேளனம் மாணவர் சமூகத்தைக் கோரியுள்ளது.

முதல் வருடத்தில் சேரும் மாணவர்கள் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர் பல்கலைக் கழகங்களில் சேர்வதற்கு அவர்கள் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இன்றைய பொருளாதார நிலையில் சிரேஷ்ட மாணவர்கள், முதல் வருட மாணவர்களைத் துன்புறுத்தாமல் இருக்க வேண்டும் என்றும் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதேவேளை சிறிஜெயவர்த்தன புர பல்கலைக்கழகமாணவர் சமரதுங்க (வயது 21) என்பவருக்கு றாக்கிங்கின் போது பலரக மீன் முட்களைச் சாப்பிடக் கொடுத்ததை அடுத்து அவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், குணமடைந்தாலும் அவர் நிரந்தரமாகப் பேசும் சக்தியை இழந்து விடுவார் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஜே. வி. பி. இயக்கத்தை
# காட்டிக் கொடுக்காததிற்காக சிறையில் வாடுகின்றனர்

(கொழும்பு)

ஜே. வி. பி சந்தேக நபர்களைக் காட்டிக் கொடாதவர்கள் மற்றும் அரசின் அறிவிப்புக்கு அமையச் சரணடைந்தவர்கள் 158 பேர்கள்மீது இதுவரை எதுவித வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் இவர்கள் தடைமுகாம்கள், காவல் நிலையங்கள், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வண. பிதா மத்தியூவின் மரணதண்டனை ஊர்ஜிதம்

(கொழும்பு)

இரட்டைக் கொலைவழக்கில் வண பிதா மத்தியூ பீரிசுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றமும் உறுதி செய்திருக்கிறது. மேற்படிவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இரண்டாவது எதிரியான டால்ரின் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையைத் தொடர்ந்து விடுதலைசெய்யப்பட்டிருக்கின்றார்.

ரசல் இங்கிரம், திருமதி கியூனிஸ் பீரிஸ் ஆகியோரைக் கொலை செய்ததாக மத்தியூ பீரிஸ், டால்ரின் ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கில் மேற்படி இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

# ஒடிக்குலோன், படச்சுருள் முற்றாகத் தடை

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாக ஒடிக்குலோன் மற்றும் புகைப்படச் சுருள் கொண்டு வருவதற்கு இராணுவம் முற்றாகத் தடைவிதித்துள்ளது.

கடந்த நான்காம் திகதியிலிருந்தே இத்தடை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இப்பொருள்கள் இதற்கு முன் குறுகிய அளவில் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# ரம்மியா வவுனியாவில் கைது

(கொழும்பு)

தென்பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த ரம்மியா (46 வயது) என்னும் பெண்மணி நேற்று வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டப்பகலில் வீட்டில் கொள்ளை

(ஈச்சமோட்டை)

பட்டப்பகலில் யாழ். கொழும்புத்துறை மேற்கு வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர் கோஷ்டியினர் அங்கு இருந்த பல ஆயிரம் பெறுமதிமிக்க தங்க நகைகளைகளவாடியுள்ளனர். அப்போது கூச்சல் கேட்டு ஓடி வந்த அயலவர்களால் மேற்படி கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் கையும் மெய்யுமாக வீதியால் வந்த நபரிடம் சிக்கிக் கொண்டார். பின்பு இவர் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார். இச் சம்பவம் சென்ற சனிக்கிழமை இடம் பெற்றது. (43)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

முதலுதவிப் பயிற்சி பெற்ற சனசமூக நிலைய அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று காலை ஒன்பது மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# தங்கம் கடத்தல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளை இலங்கைக்குள் கடத்திவர முயன்ற ஒருவர் சுங்கப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டார். பிரயாணப் பைகளுடன் எடுத்து வரப்பட்ட வீடியோ டெக்கினுள் இத் தங்கக் கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை சுங்க அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# விஷ்ணுவும், நாகேசும் சுற்றிவளைப்பிலாம்

(பதுளை)

ஊவா மாகாணத்தினுள் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த மேஜர் விஷ்ணுவும், கப்டன் நாகேசும் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிபில காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதல் உட்பட மற்றும் பல தாக்குதல் சம்பவங்களில் இவர்களது குழுவினரே ஈடுபட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# ஜே.வி.பியினர் சிலர் மொனராகலையில் கைது

மொனராகலைப் பகுதியில் சேனைச் செய்கையில் ஈடுபட்டுவந்த சிலரைப் பொலிசார் கைதுசெய்து விசாரணை நடத்தியபோது திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்ததாகச் சொல்லப்படுகிறது.

18 வயதுடைய இளைஞர் ஒருவரால் தலைமை தாங்கப்பட்ட இக்குழுவினர் ஐந்து பேரைக் கொலை செய்திருப்பதாகவும், பல தீவைப்புச் செயல்கள், மற்றும் கொள்ளைகள் என்பவற்றில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் அனைவரும் ஜே. வி. பி, இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனவும், இவர்களால் கொல்லப்பட்டவர்களில் மூவர் படையினர் எனவும் பொலிசார் கூறுகின்றனர்.

# செட்டிகுளம் ஆஸ்பத்திரி இடம்மாற்ற கோரிக்கை

(வவுனியா)

தற்போது செயலிழந்துள்ள செட்டிகுளம் வைத்திய சாலையை செட்டிகுளம் பிரதேசத்திலேயே இராணுவ அச்சுறுத்தல் அற்ற இடம் ஒன்றில் மீண்டும் செயல்பட வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அப் பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

தற்போது செட்டிகுளம் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறு பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் வைத்திய சிகிச்சையற்று அவதிப்படுகின்றனர் இந்த அவதியைப் போக்குமுகமாகவே மேற்படி கேட்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வைத்திய சாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் தொழிலிழந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

# 'மொனராகல கம்உதாவ' 300 கோடி ரூபா ஒதுக்கீடு

மொனராகலவில் இம்முறை நடைபெறவிருக்கும் கம் உதாவ கொண்டாட்டங்களுக்காக முந்நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதில் மூன்று கோடி ரூபாய் மின்சார விநியோகத்திற்கெனவும், குடிநீர் விநியோகத்திற்காக பத்துக்கோடி ரூபாயும், வீடமைப்புக்காக பன்னிரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபாயும், வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு இருபத்தைந்து கோடிரூபாயும், நகரவிருத்திக்காக நான்கு கோடியே ஐம்பது லட்சம்ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும்இக்கம்உதாவ கொண்டாட்டங்களுக்காக கட்டப்படும் கட்டிடங்கள்பின்னர் இணைந்த பல்கலைக்கழகங்களின் திட்டத்திற்கென மொனராகலமாவட்டத்திற்கு வழங்கப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரேமாவிடம் தொடர்ந்தும் கல்வி, உயர்கல்வி அமைச்சு

கல்வி, உயர்கல்வி அமைச்சின் பொறுப்புக்களை தாமே தொடர்ந்து வைத்திருக்கப் போவதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் அபிவிருத்தித் தேவைகளைக் கருத்திற் கொண்டு கல்வியமைப்பு மீளமைக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காகவே மாவட்டம் தோறும் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் நிறுவப்படுகின்றன என்றும் அவர் சப்பிரகமுவா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியை பார்வையிட்டபின்னர் தெரிவித்துள்ளார்.

# சமாதானத்திற்கான மாறிஸ் ஊர்வலம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு ஸ்ரெலாமாறிஸ் கல்லூரி சமாதான ஊர்வலம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. ''சமாதானத்துக்கான மாறிஸ் ஊர்வலம்'' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த ஊர்வலம் கல்லூரியின் 70-வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை ஒட்டி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஊர்வலம் வரும் 29 ஆம் திகதி காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பமாகும். கல்லூரி மாணவர்கள், நலன் விரும்பிகள், மற்றும் பழைய மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்கொழும்பு நகரத்தைச் சுற்றி நடைபெறவிருக்கும் இந்த ஊர்வலத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகளுடன், சூழல், எயிட்ஸ் கட்டுப்பாடு, போன்றவற்றைக் குறிக்கும் சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்படும் என இதன் அமைப்பாளர் அன்ரன் குணவர்தன தெரிவித்தார்.

# அலுவலகம் திறப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். பழைய பூங்கா வீதியில் புதிய யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நேற்று யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரினால் திறந்து வைக்கப்பட்டது. இவ்வலுவலகம் முன்னர் அடைக்கலமாதா கோவிலுக்கு பின் வீதியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (43)

## சிந்தனைக்கு

தன்னையே முழுதும் நம்பி,
தன் தேவைகள் அனைத்துக்கும்
தன்னையே மையமாக அமைத்துக்
கொள்பவனே எல்லா இன்பமும் எய்துவான்.
- ஸிஸெரோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 11-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# புலிகளிடம் காஷ்மீரியர் கற்கத் தவறியது

"பாகிஸ்தான் அரசாங்கம் இரட்டை வேடம் போடுகின்றது. அதனை நம்பி மக்கள் இனியும் ஏமாறக் கூடாது" என காஷ்மீர் விடுதலைமுன்னணிதலைவர்களில் ஒருவரானஜாபீர் அகமட்மீர் அறிவித்துள்ளார். அதாவது பாகிஸ்தான் நட்டாற்றில் கை விட்டு விட்டது, காஷ்மீரியர்களின் போராட்டத்தை தமது காலிலேயே நின்று நடத்த வேண்டும் என்பதே இவ் அறிவிப்பாகும்.

வேறு நாட்டின் ஆதரவில், அல்லது மண்ணில் நின்று விடுதலைப் போராட்டத்தை நடத்துபவர்களுக்கு இது நல்லதொரு படிப்பினையாகும். ஆனால், இது தான் விடுதலை இயக்கங்களுக்கு முதல் கிடைத்த படிப்பினை அல்ல. ஆனால், இது கடைசியாக நடந்துள்ள ஒரு புதிய உதாரணமாகும். ஆனால் இதனை இவ்வளவு காலந்தாழ்த்தி காஷ்மீர் விடுதலை முன்னணி உணர்ந்திருப்பது தான் கவலை அளிக்கும் விடயமாகும்.

பாகிஸ்தானுக்குத் தேவை இந்தியாவின் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதே ஒழியகாஷ்மீரியரின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதென்பதல்ல. இதனை காஷ்மீர் விடுதலை முன்னணி விளங்கிக் கொள்ளாமை தான் ஆச்சரியப்படத்தக்க விடயமாகும். காஷ்மீர் விடுதலை முன்னணி தனியாக, ஜம்மு - காஷ்மீர் பகுதி மட்டும் விடுவிக்கப்பட வேண்டும் எனக்கோரும் அமைப்பல்ல. பாகிஸ்தானின் கீழ் உள்ள ஆசாத் காஷ்மீர் பகுதியும் விடுவிக்கப்பட்டு காஷ்மீர் ஒன்றிணைக்கப்பட்டு, தனிநாடாக வேண்டும் என்று கோரும் அமைப்பாகும். இந்நிலையில் இவ்வமைப்பு எவ்வாறு பாகிஸ்தான் தனக்கு ஒத்துழைக்கும் என எதிர்பார்க்க முடியும். இந்தியாவிலிருந்து ஜம்மு-காஷ்மீர் விடுவிக்கப்பட்ட பின் தனக்கு ஏற்படும் நெருக்கடியை எந்த மடையன் விலைகொடுத்து வாங்க முற்படுவான்.

கடந்த காலத்திலும்காஷ்மீர் விவகாரமாக இந்தியாவுடன் பாகிஸ்தான் சில தடவைகள் மோதிக்கொண்டதாயினும், அவை யாவும் காஷ்மீரியரின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக மோதிக் கொள்ளவில்லை. காஷ்மீர் பிரதேசத்தை தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரவும், பாகிஸ்தானின் உள் நாட்டு அரசியலில் ஏற்பட்ட நெருக்கடியும், பங்களாதேஷ் விவகாரங்களுமே காரணமாக இருந்தன.

பாகிஸ்தானில்இராணுவஆட்சியார்ளகளாகஇருந்தவரும்சரிதான்,மக்களால் தெரிவு செய்யப்பட்டஆட்சியாளர்களாக இருப்பினும் சரிதான் உள்நாட்டு அரசியல் நெருக்கடி ஏற்படும்போதே காஷ்மீர் விவகாரத்தைப் பெரிது படுத்தி மக்களின் கவனத்தைத் திசை திருப்புவது வழமையான நடவடிக்கையாகும், இதில் பாகிஸ்தானை ஆண்ட இராணுவ ஆட்சியாளரான அயூப்கானாக இருந்தாலென்ன' ஜகியாக்கானாக இருந்தாலென்னா,மக்களால் தெரிவு செய்யப்பட்ட பூட்டோவாகஇருந்தாலென்ன நவாப்சரீப்பாக இருந்தாலென்ன இதுவேஅவர்களின்வழிமுறையாகஇருந்தது இதில்சிலர் பிரச்சினையைதமதுகைமீறிப்போகவிட்டுஇந்தியாவுடன் மோதிக் கொண்டார்கள். சிலர் இடையில் பின்வாங்கி விட்டனர். இதில் மோதிக்கொண்டவர்கள், பிரச்சினையைக் கைமீறிப்போக விட்டவர்கள் போரின் பின் நீண்ட நாள் ஆட்சியில் இருக்கவில்லை.

வரலாற்று நிகழ்வுகள் இவ்வாறு இருப்பதோடு,உலகச் சூழ்நிலையும்தற்பொழுதுபாகிஸ்தானுக்குஎதிராகஇருக்கும் போது காஷ்மீருக்காக இந்தியாவுடன் பாகிஸ்தான் மோதிக் கொள்ளும் என ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி எதிர்பார்ப்பது மடமையாகும். பாகிஸ்தான் தனது வரலாற்றை உணர்ந்து கொண்டது போல் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி வரலாற்றையும் உலக அரசியல் சூழலையும் விளங்கிக் கொள்ளவில்லை. அதாவது பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கு எனத் தயாரிக்கப்பட்டஅணுகுண்டு அதற்கேஆபத்தாக இன்றுஇருக்கும் வேளையில் பாகிஸ்தான் விஷப் பரீட்சை ஒன்றில் ஈடுபடும் என ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி எண்ணியமை உலகத்தின் போக்கில் இருந்து விலகியிருப்பதையே காட்டுகின்றது.

இது காஷ்மீர் விடுதலை முன்னணிக்கு ஒரு கசப்பான அனுபவம் தான். ஆனால், இதனை காஷ்மீர் விடுதலை முன்னணி தவிர்த்திருக்கலாம். இதற்கு முன்னுதாரணம் தென்னாசியாவிலேயே உளளது. இந்தியாவின் உதவி தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு எந்தளவிற்கு உதவும் என்பதை தெளிவாகக் கணக்கிட்டு, இந்தியாவின் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறாமல்,அவர்கள் சூழ்ச்சியில் சிக்காமல்,தொடர்ந்தும் விடுதலைப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதை அவதானித்திருப்பின் அது சாத்தியப்பட்டிருக்கும்.

### அணு கதிர் வீச்சு தொழிற்சாலைகளை

# மூன்றாம் உலகில் அமைக்க உலக வங்கி இரகசிய திட்டம்

(லண்டன்)

அணுக்கதிர் வீச்சுப் பாதிடபை உண்டாக்கக் கூடிய தொழிற்சாலைகளை மூன்றாம் உலக நாடுகளில் நிறுவும்படி ஆலோசனை கூறும் உலக வங்கியின் இரகசிய திட்டம் ஒன்று தன் வசம் உள்ளதாக லண்டனில் வெளியாகும் 'எக்கனோமிஸ்ற்' என்ற சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உலக வங்கியின் பிரதம பொருளியலாளர் லோறன்ஸ் சமேர்ஸ், தனது திட்டத்தின் சில பகுதிகள் உலக வங்கியில் சலசலப்பை ஏறபடுத்தியதாகக் குறிப்பிட்டு முகவர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தைப் பிரசுரிக்கப் போவதாகவும் 'எக்கனோமிஸ்ற்' அச்சுறுத்தியுள்ளது.

மெக்சிக்கோ நகரம் மற்றும் லொஸ் ஏஞ்சல்சை விட ஆபிரிக்காவின் வளிமண்டலம் குறைவாக மாசுபட்டிருப்பதாகவும் லோறன்ஸ்சமேர்ஸ் கடிதமெழுதியுள்ளதாகவும் அப் பத்திரிகை தெரிவிக்கிறது அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு ஏன் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவக் கூடாது என்றும் அக் கூட்டத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## நேட்டோ அதிகாரிகள்; ஆயுதக் குறைப்பு யோசனை

(லண்டன்)

நேட்டோ நாடுகளின் அதிகாரிகள் பெரும் அழிவை ஏற்படுத்தும் நீண்டதூர ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பாக ஆராய்வதற்கென உத்தியோகப் பற்றற்ற முறையில் கூடியுள்ளனர். பிரிட்டனின் தென் பகுதியில் நடைபெறும் இக் கூட்டத்தில் நேட்டோ நாடுகளைச் சேர்ந்த சுமார் நூற்றுமுப்பது அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## சார்ள்ஸ் - டயானா இந்தியா வந்தனர்

(டில்லி)

இந்தியாவுக்கு ஆறு நாள் விஜயமென்றை மேற்கொண்டு பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸும் அவரது மனைவி டயானாவும் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தனர்.

அவர்கள் புதுடில்லி குடியரசுத்தலைவர் ஆர். வெங்கட்ராமன், குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயான் சர்மா, பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மற்றும் திருமதி சோனியா காந்தி ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர். அதன்பின் ஜெய்ப்பூர், பெங்களூர், ஹைதராபாத், கல்கத்தா ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்

## இராமஜென்மபூமி - பாபர்மசூதி இணக்கத் தீர்விற்கு முயற்சி

(டில்லி)

இராமஜென்மபூமி - பாபர் மசூதிபிரச்சினை தொடர்பாக இணக்கமான தீர்வொன்றைக் காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உத்தரப்பிரதேச ஆளுநர் கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேச சட்டசபையின் கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்துப்பேசிய அளுநர் சத்ய நாராயண் ரெட்டி மேலும் பேசுகையில், நீண்டகால-குறுகியகால அடிப்படை அயோத்தியாவில் தாவாவிற்கு உட்பட்ட பகுதியில் ஓர் இணக்கமான தீர்வொன்றைக்காண முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

### தனியாரிடம் தோட்டங்களை அல்ல,

# தோட்ட நிர்வாகத்தை மட்டுமே கையளிக்கவுள்ளோம்

ரணில் விக்கிரமசிங்கா

"தோட்ட நிர்வாகத்தை மட்டுமே தனியாரிடம் கையளிக்கவுள்ளோம். தோட்டங்களை ஒருபோதும் தனியாரிடம் கையளிக்கப்போவதில்லை". இவ்வாறு கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் பேசும்போது இவ்வாறு தோட்ட நிர்வாகங்களை தனியாரிடம் ஒப்படைப்பதனால் தொழிலாளர்கள் வேலை இழக்க மாட்டார்கள் என்றும், இதனால் தொழில்துறைகளில் புதிய முகாமைத்துவம், தொழில்நுட்பம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டு தோட்டத் தொழிற்றுறை அபிவிருத்தி செய்யப்படும் என்றும் கூறினார்.

கம்பன்

போலப் பட்டிமண்டபம், கவியரங்கு, ஆய்வரங்கு, மேன்முறையீட்டுப்பட்டி மண்டபம், இளைஞர் அரங்கு போன்ற நிகழ்ச்சிகளுடன் புதிய நிகழ்ச்சியாக நாடக அரங்கும் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

புலிகளின்

னியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான ரூபா செலவு செய்து அவற்றில் நவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன. தொடர்பு சாதனங்களும் உண்டு.

ஏற்கனவே புலிகள் இயக்கம் மூன்று கப்பல்களை வாங்கியிருந்தது. அதில் டொல்கோவா என்ற கப்பல் இந்தியாவிடம் சிக்கியுள்ளது எஞ்சிய நான்கு கப்பல்களையும் கைப்பற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் அரசின் நடவடிக்கைகள் எத்தகையது என்பது தெரிய வரும் என்பதால் விளக்கமாக பதில் அளிக்கமுடியாது என்றார்.

### க. பொ. த. உயர்தர பரீட்சை

## தனிப்பட்டபரீட்சார்த்திகளின் மொத்தப்புள்ளிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான மொத்தப் புள்ளிகள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

இதுவரை மொத்தப் புள்ளிகள் கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது சுட்டெண்ணுடன் கல்வித்திணைக்கள கல்வி நிர்வாகப் பிரிவில் தமது புள்ளிகளைப் பார்வையிடலாம் என பிரந்திபக் கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

### இல. செஞ்சிலுவை யாழ் கிளை

## நிர்வாகசபை தெரிவு; தேர்தலில் புதிய விதிமுறை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கான நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைமுறையில்சிலபுதியவிதிகள்அறிமுகப் படுத்தபட்டிருக்கின்றன

உதவி அரசாங்க அதிபர் பிரிவுரீதியிலானசெஞ்சிலுவைச்சங்கங்களில்இருந்து 30 அங்கத்தவர்கள் மட்டுமே மேற்படி நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களில் பங்குபற்ற முடியும், நிர்வாகக் குழுவில் ஐந்து பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட வேண்டும் ஆகிய புதிய விதிகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முன்னர் இருந்த நடைமுறைகளின்படி அங்கத்தவர்கள் அனைவரும் தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்க முடியும் என்பதுடன், நிர்வாகசபையில் 11 பேர் அங்கத்தவர்களாக இருந்தனர் புதிய நடைமுறையைப் பின்பற்றி யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தேர்தலில் வாக்களிப்பதாக 30 பேர் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். (75)

வீரச்சாவு

7 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட கடும் சமரில் காயமுற்றிருந்த வீரவேங்கை விஜி (மகிந்தகுமார்) 8-02-1992 இல் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இந்தியாவுக்கு - பாக். உறுதி; எல்லைதாண்ட விடோம்

(டில்லி)

காஷ்மீர் - பாகிஸ்தான் எல்லைக் கோட்டைத்தாண்டி வர எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என பாகிஸ்தான் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறுதெரிவித்தார்.

இதேவேளைபாகிஸ்தானின் உறுதிமொழியை மத்தியஅரசு அப்படியே நம்பிவிடக் கூடாது என காங்கிரஸ் கட்சி பேச்சாளர் பேராசிரியர் தாவூத் செய்தியாளர்களிடம்தெரிவித்தார்.

ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான முக்தி முகமத் சையத் ஜம்மு காஷ்மீர் பிரச்சினையை ஒரு சர்வதேச விவகாரமாக ஆக்கியிருக்கக் கூடாது என தெரிவித்தார். ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு இதில் எந்தவித சம்பந்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## காஷ்மீர் இந்தியாவின் பிரிக்கமுடியாத பகுதி

### அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவு

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியும் ஆகும். காஷ்மீரில் எல்லைக் கோட்டை மீறும் எந்த நடவடிக்கையையும் முறியடிக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என இந்திய அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மோதலில் இறங்கியிருப்பதும் அது தேர்ந்தெடுத்துள்ள வன்முறைவழியும் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என கூட்டத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டது.

சிம்லா உடன்படிக்கையை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன அதை பாகிஸ்தான் பின்பற்றுவதே புத்திசாலித்தனமானது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## திட்டமிட்டவாறு எல்லையைக் கடப்போம்

### -ஜே. கே. எல். எவ். அறிவிப்பு

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தான் காஷ்மீரிலிருந்து இந்தியா காஸ்மீருக்குள் இன்று நுழையப்போவதாகத் திட்டமிட்டிருக்கும் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி தாம் திட்டமிட்டபடி எல்லையைக் கடப்போம் என்று நேற்று மீண்டும் சூளுரைத்துளளது.

பாகிஸ்தான் அரசு தடைவிதித்திருந்தாலும், ஏற்கனவே பாகிஸ்தான் பெலிஸார்தமது ஆதரவாளர்களைக் கைது செய்திருந்தாலும் முன்பு அறிவித்த திட்டப்படி இல்லாமல் வேறு வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் திட்டமிட்டபடி எல்லைக் கோட்டைக் கடப்பார்கள் என்று அந்த முன்னணி அறிவித்துள்ளது.

இதற்கிடையில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடப்பதைத் தடை செய்திருப்பதாகவும், இதனைத் தடுப்பதற்கும் பலத்தைக்கூட பயன்படுகதத்தயார் என்று பாகிஸ்தான் அரசு எச்சரித்துள்ளது.

## பிரிட்டன் உதவிகள் தொடர்ந்தும் நிறுத்தம்

(லண்டன்)

பிரித்தானிய அரசு சிறிலங்காவுக்கு நிதி உதவியோ அல்லது ஆயுத உதவியோ வழங்குவதில்லை என்று மீண்டும் கூறியுள்ளது

சிறிலங்காவுக்கு நிதி உதவி வழங்குவதில்லை என்ற முன்னைய நிலைப்பாட்டில் பிரித்தானிய அரசு தொடர்ந்தும் உறுதியாக உள்ளதை இது குறிப்பிடுகிறது.

## இல. செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடக்கு-கிழக்கு இணைப்பாளர் திரு. தயாளதேவன் மற்றும் சில அதிகாரிகள் வரும் 13 ஆம் திகதி யாழ் வரவிருக்கின்றனர்.

மேலும் இவ்வதிகாரி பல தடவை யாழ் வந்துதிரும்பியது குறிப்பிடத்தக்கது. (75)

## மடு அகதி முகாமில் தொற்றுநோய் பரவுகிறது

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மடு அகதிகள் முகாமில் மலேரியா, வாந்திபேதி, வயிற்றோட்டம் முதலிய தொற்றுநோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. கடந்த மூன்று வாரங்களாக தணிந்திருந்த இந்த நோய்கள் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெருமளவுமக்கள் இந்த முகாமிற்கு வர ஆரம்பித்துள்ளனர். அதனால் அங்கு பெரும் இடநெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையால் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் உண்டு.

## தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள்

### ஒருவருடத்தில் 5 கிராமங்கள் மாற்றம்

மட்டக்களப்பு- பொலநறுவை எல்லையிலுள்ள மூன்று தமிழ்க் கிராமங்கள் கடந்த மூன்று வாரங்களில் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இந்தப் பகுதியில் 15 தமிழ்க் கிராமங்கள் சிறிலங்கா இராணுவ உதவியுடன் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு கிராமங்கள் பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவினுள் சேர்க்கப்பட்டுவிட்டன.

மேலும் பல கிராமங்களை பொலநறுவை நிர்வாகப் பகுதிக்குள் கொண்டுவரதிட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் இரத்தம் முற்றாகத் தீர்ந்துவிடும் நிலையில் உள்ளது. அனைத்து வகை இரத்தமும் இவ்வாறு பற்றாக்குறைநிலையில் இருப்பதால் இரத்ததானம் செய்ய விரும்புவோர் உடனடியாகப் போதனாமருத்துவமனை இரத்த வங்கி அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளும்படி இவ்வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (க)

## ஜம்மு காஷ்மீரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

ஜம்மு - காஷ்மீர் பிரதேசத்தில் கடுமையான புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது

இந்திய காஷ்மீர் பிரதேசத்தினுள் பாகிஸ்தானிய காஷ்மீர் போராளிகள் ஆர்ப்பாட்ட ஊர்வல ஊடுருவல் செய்ய முயன்றிருக்கும் இன்றைய கட்டத்திலேயே இந்தியா காவல் நடவடிக்கைகளைச் செயற்படுத்த எண்ணியுள்ளது.

சிறிநகர் உட்பட பல நகரங்களில் இன்று காலையிலிருந்து காலவரையறையற்ற ஊரடங்கு அமுல்படுத்தப்படும்.

போராளிகள் ஊடுருவல் செய்ய முற்பட்டால், அது தடுக்கப்படும் எனவும், பொது மக்களுக்குப் பங்கம் ஏற்படும் என்ற நிலை இருந்த போதிலும் கூட, வேண்டுமானால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படும் எனவும் துணை ஆளுநர் பி. எஸ். பிடி அவர்கள் குறிப்பிட்டார்.

## ஆனைக்கோட்டையில் இருகுழுக்கள் மோதல்

ஆனைக்கோட்டையில் நேற்றுமாலை இரு குழுக்களுக்கிடையில் மோதல் இடம் பெற்றது.

நேற்று முன் தினம் நடைபெற்ற வீதிவிபத்தில் பெண் ஒருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து இம்மோதல் மூண்டது.

இம்மோதலில் சிறு தடிகள், இரும்புக்கம்பிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டதுடன் 75 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். ஒரு கடை, ஒரு சனசமூக நிலையம், சில வீடுகள் போன்றவை இம்மோதலின்போது சேதமாக்கப்பட்டன. மோதலின் உக்கிரத் தன்மையைக் கட்டுப்படுத்துவதில் தமிழீழக் காவற்றுறையினரும் விடுதலைப் புலிகளும் ஈடுபட்டனர். கூட்டத்தைக் கலைப்பதற்க எச்சரிக்கை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன இதனால் ஆனைக்கோட்டை பிரதான வீதியில் சிறிது நேரம் போக்கு வரத்துகள் தடைப்பட்டன. இம்மோதலில் ஒருவர் காயமடைந்தார். (க)

### யுத்தமுனைக்கு

தாம் அதிகமான அழுத்தத்தைத் தாங்கவேண்டியுள்ளதாக இந்த இராணுவ அதிருப்தியாளர் தெரிவிக்கின்றனர்.

மேலதிகாரிகளிடம் தமது செல்வாக்கைப் பாவித்து, யுத்தம் நடைபெறும் பக்கம் தலைவைத்தும் படுக்காமல் எப்படியோ மற்றவர்களைப் போல பதவி உயர்வுகளைத் தட்டிக்கொள்ளும் இந்த அதிகாரிகள் குறித்து இவர்களது சகபாடிகள் கவலை தெரிவிப்பதாக ஐலன்ட் கூறுகிறது.

பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் ஆகிய விடயங்களில் சகல அதிகாரிகளும் ஒரே மாதிரித்தான் நடத்தப்படுகிறார்கள் என்றும், இதில் ஊழலுக்கு இடமில்லை என்று ஒரு உயர் அதிகாரி இந்தக் குற்றச் சாட்டுகளை மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் முனையில் போராடி நற்பெயர்வேண்டிய பிரிவுகளை குறுகியகால ஓய்வின் பின் மீண்டும் போர்முனைக்கு அனுப்பும் வழக்கம் குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. போர்முனையில் கடமையாற்றும் தளபதிகள் போரில் நற்பெயர்வேண்டிய இராணுவப் பிரிவையும், அதிகாரிகளையும் விரும்புவது இராணுவத்தில் இயற்கையான போக்கு என்று உயர் அதிகாரிகள் தெரிவிப்பதாக ஐலன்ட் கூறுகிறது.

இது இப்படியாயின், இராணுவத்தில் ஒரு சிலர் தமது குடும்பங்களைப் பிரிந்து கஷ்டப்பட மற்றவர்கள் யுத்த வலையத்துக்கு அப்பால் சுகமாக வாழ்வதாக யுத்த முனையில் கஷ்டப்படும் இராணுவத்தினரை மேற்கோள் காட்டி ஐலன்ட் கூறுகிறது

### 50 கலிபர்

- ★ எவ். என். சி. - 01
- ★ எவ். என். சி. மகசீன் - 01
- ★ எவ்.என் சி. கிரனைட் - 03
- ★ மொபையில் செற் - 01
- ★ ரெலிபோன் - 01
- ★ பைனாகுலர் - 01
- ★ இரவு பார்வை சாதனம் - 01
- ★ பராலைற் - 01
- ★ ஏ. கே. எல். எம். ஜி. றம் மகசீன - 02
- ★ ஏ.கே.எல்.எம் ஜி.லிங்-128
- ★ றெயின் கோட் - 03
- ★ கெல்மட் - 07

### புலிகள்

மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் இப் பேச்சுவார்த்தை நடைபெற்ற போதிலும் பேச்சுக்களின் விபரங்களை இரு தரப்பினரும் வெளியிடவில்லை. (க)

### முல்லையில்

காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு இராணுவத்தினர் முகாமின் மத்திய பகுதி நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

### இராணுவம் காலிழப்பு

இதேவேளை, காவலரணில் இருந்த இராணுவத்தினருக்கு உதவியாக வந்த இராணுவத்தினரில் சிலர் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

### விமானக்குண்டு வீச்சு; ஷெல் தாக்கு

முல்லைத்தீவு இராணுவத் தளத்தின் காவலரண்கள் தாக்கிக் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தளத்தின் மையப்பகுதியில் இருந்தும், மணலாற்றுப் பகுதியில் இருந்தும் இக்காவலரணைச் சூழவுள்ள பகுதிகள் மீது பரவலான எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள், இவ்வாண்டில் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல் இதுவென்றும், ஆறு காவலரண்களை புலிகள் கைப்பற்றியதாகவும் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் அச்செய்தியில் இப்பகுதிக்கு மேலதிக படைப்பிரிவுகளும், ஆயுதங்களும் அனுப்பிவைத்துள்ளதாகவும், புலிகளின் நிலைகளின் மீது விமானக் குண்டு வீச்சு நடாத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அனுமதிப்

அதன் சரியான தமிழ்ச் சொல்லும் பின்வருமாறு. திணைக்கலம் (திணைக்களம்), சிட்டு (சீட்டு), கத்திரமும் (பத்திரமும்), புறம்பக்க (புறம்பாக), வில்லங்கங்கள் (விளைவுகள்), அனுமதிக்கப்பட்டுள்ளர் (பட்டுள்ளார்), சம்பனமாக (சம்பளமாக), உத்திளோகத்தர் (உத்தியோகத்தர்), மதபீடங்களுக்கு (மதபீடங்களுக்கு), பொறுப்பாள (பொறுப்பான), ஆகியோகளில் (ஆகியோர்களில்), கையொப்பமிடாரென (கையொப்பம் இட்டாரென) இது மிகப்பாரதூரமான தவறான எதிர்மாறான சொற்பிரயோகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இந்த அனுமதி அட்டையை அனுப்பிய யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் திருவுக்குப்பதிலாக திருமதி எனவும் வீதி என்பதற்கு பதிலாக விதி எனவும் பண்டத்தரிப்பு என்பதற்கு பதிலாக பண்டைத்தரிபி எனவும் எழுதியுள்ளமையே வேதனை தருகிறது. (ச)

### அமைச்சர்கள்

யோகம் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குவது ஆகியன தொடர்பாகவுமே இம் மாநாடு நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இம் மாநாட்டில் சிறிலங்கா கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வணசிங்கா உணவு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி கடற்படைத்தளபதி லோறன்ஸ் பர்னாண்டோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மற்றும் அத்தியாவசிய சேவை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கில்

இழப்புக்கள் அதிகம் ஏற்படுவதனால் இப்பொழுது புலிகள் தமது தாக்குதல் முறையில் சிறிது மாற்றம்செய்துள்ளனர் ஒரேயடியாக முகாம்களைத் தாக்கி அழிப்பதற்குப் பதிலாக தமக்குநன்குபரிச்சயமான கரந்தடிமுறை மூலம் சண்டையை ஆரம்பிக்கிறார்கள். பின்னர் நேரடிமோதல்மூலம் இராணுவத்தை அடித்துக் கலைத்து விடும் தந்திரத்தை இபபொழுது மேற்கொள்வதாகவும், இப்புதிய யுக்தியினால் புலிகள் பல வெற்றிகளைச் சந்தித்துள்ளதாகவும் பி பி. ஸியின் கொழும்புச்செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.